பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 02 வியாழக்கிழமை 17.12.2020 கதிர் 42

## இது ரகசியம் அல்ல!

மருதனார் மடத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதும், அதை அடுத்து நிகழ்ந்த சம்பவங்கள், விடயங்கள் பலவும் ஆச்சரியம் தருவனவாக இருந்தன.

அவற்றில் ஒன்று – தொற்றாளர் எண்ணிக்கை பக்கம்02 »

## சுட்டுக் கொல்லப்பட்ட 4 கைதிகளின் உடலை எரிக்க நீதிமன்றம் உத்தரவு!

மஹர சிறைச்சாலை வன்முறையில் உயிரிழந்த நான்கு கைதிகளின் உடலை எரிப்பதற்கு வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் ஏற்பட்ட காயங்களே, இந்த நான்கு கைதிகளின் மரணத்துக்குக் காரணம் என்று பிரேத பரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை வன்முறைச் சம்பவத்தை ஆராயும் நிபுணர் குழு, மேற்படி நான்கு கைதிகளின் பிரேத பரிசோதனை அறிக்கைகளை வத்தளை நீதிவான் முன்னிலையில் நேற்று சமர்ப்பித்ததைத் தொடர்ந்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை பக்கம் 02 »

## குடிக்கத் தண்ணீர் கேட்டால் சுட்டுக்கொல்லும் அரசே இது

### ராஜபக்ஷ தரப்புக்கு மனோ சாட்டையடி



மஹர சிறைச்சாலையில் மரணமடைந்த கைதிகளில் நால்வர் துப்பாக்கிச் சூட்டில் மரணம் என்று விசாரணை அறிக்கை கூறுகின்றது. ஆகவே, கைதிகள் தங்களுக்குள் அடித்துக்கொண்டே செத்தார்கள் என அரசு ஆரம்பத்தில் அறிவித்தது பச்சை பொய். குடிக்கத் தண்ணீர் கேட்டால் சுட்டுப் படுகொலை செய்யும் அரசே இதுவாகும்.’

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பக்கம் 02 »

# தாண்டவமாடும் ‘மருதனார்மடம் கொத்தணி’ தொற்றாளர் எண்ணிக்கை 68 ஆக அதிகரிப்பு

## நேற்று மட்டும் 10 பேருக்குத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 17

யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம் பொதுச்சந்தை கொத்தணியுடன் தொடர்புடைய மேலும் 10 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்படி மருதனார்மடம் பொதுச்சந்தை கொத்தணி தொற்று எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். பக்கம் 02 »

## மேலும் அறுவர் பலி மொத்தக் காவு 160

இலங்கையில் மேலும் அறுவரைக் கொரோனா வைரஸ் பலியெடுத்துள்ளது.

கொழும்பு – 15ஐச் சேர்ந்த 85 வயது ஆண், கொழும்பு – 14ஐச் சேர்ந்த 60 வயது பெண், கொழும்பு – 15ஐச் சேர்ந்த 84 வயது ஆண், களுத்துறை – பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 73 வயது பெண், கொழும்பு – 14 ஐச் சேர்ந்த பக்கம் 02 »

## நேற்றும் 611 பேருக்கு கொரோனாத் தொற்று

### 34 ஆயிரத்தைக் கடந்தது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் நேற்றும் 611 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 31 ஆயிரத்து 70 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் பக்கம் 02 »

## வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணி!



லங்கா பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் வெற்றிக்கிண்ணத்தை ஜப்னா (யாழ்ப்பாணம்) ஸ்டாலியன்ஸ் அணி கைப்பற்றியுள்ளது.

லங்கா பிரிமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டி நேற்று அம்பாந்தோட்டையிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. இதன்படி களமிறங்கிய அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜப்னா அணி சார்பாக சொயிப் மலிக் 46 ஓட்டங்களையும், பக்கம் 02 »

## தப்பியோடிய கொரோனா நோயாளி ஒருவர் மருதானைப் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் வெலிசறை வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற ஒருவர் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மருதானைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டார் என்று மருதானைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த நபர் மீண்டும் வெலிசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மருதானைப் பொலிஸார் மேலும் கூறினர்.

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் மஹ்ரூபுக்கு இன்று வரை மறியல்



லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பக்கம் 02 »




## உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள்

### மஹிந்தவுக்கு நேரில் நன்றி தெரிவித்தாராம் பேராயர்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் பிரதமர் உள்ளிட்ட அரசைப் பாராட்டுகின்றேன் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

2019 உயிர்த்த ஞாயிறு பக்கம் 02 »

## நிர்வாக சேவை தரச் சித்தி பெற்ற அதிபர்கள் உடன் நிர்வாகத்துக்கு

### பாடசாலைகளில் இருந்து விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.17

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் நிர்வாக சேவை தரச் சித்தி எய்திய பின்னரும் தொடர்ந்தும் அதிபராக பணியாற்றியவர்கள் உடனடியாக நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொடர்பான அதிகாரிகளின் அறிவித்தல்களில் காணப்பட்ட முரண்பாடுகள்.

அதைவிட இன்னொரு சம்பவமும் நடந்தது. கடந்த 12 ஆம் திகதி அங்கு ஒருவருக்குத் தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து அடுத்த நாள் மேலும் பலருக்குத் தொற்று ஏற்பட்டமையை உறுதிப்படுத்தும் அறிகுறிகள் தென்பட்டன. அதையடுத்து அன்று – 13ஆம் திகதி இரவு – உடுவில் பிரதேச செயலர் பிரிவு முழுமையாக மறு அறிவித்தல் வரை முடக்கப்படுவதான அறிவிப்பு வந்தது. சுகாதாரத் துறையினர் விடுத்த வேண்டுகோளின் பேரில் யாழ் அரச அதிபர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் அன்று நள்ளிரவு அளவில் இந்த அறிவிப்பை விடுத்தனர்.

வழக்கமாக இத்தகைய அறிவித்தல் விடுக்கப்பட்டால் குறைந்தபட்சம் சுமார் பதினான்கு நாள்களாவது அது நீடிக்கும். பல சமயங்களில் அதையும் தாண்டும்.

ஆனால், உடுவில் பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரை விசித்திரமாக – அதிசயமாக – அவசர அவசரமாக நள்ளிரவில் அறிவிக்கப்பட்ட முடக்கம் (லொக்டவுண்) அடுத்த நாள் பகலே, வந்த வேகத்திலேயே, நீக்கப்பட்டதான அறிவிப்பு வந்ததும் பலரும் ஆச்சரியப்பட்டுத்தான் போனார்கள்.

என்ன, ஏது என்று தேடிப்பாருங்கள் என்று என் செய்தி வட்டாரங்களைத் துருவித் தூண்டினேன்.

நாடு முழுவதும் கொரோனாப் பரவல் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. நாட்டை முடக்குங்கள் என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் கேட்டபோது எதற்காக நாட்டை முடக்க அரசு மறுத்ததோ அதுதான் உடுவில் பிரதேச செயலக முடக்கமும் வந்த வேகத்தில் நீக்கப்பட்டமைக்குக் காரணம் என்பது அறியவந்தது.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவு முடக்கப்படுவதான அறிவிப்பு ஞாயிறு நள்ளிரவு வெளியிடப்பட்ட போதே யாழ் மாவட்டச் செயலக வட்டாரங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலக மூத்த அதிகாரிகளை மடக்கி, உடனடியாகவே அப்பிரிவில் எத்தனை குடும்பங்கள் உள்ளன, அதில் எத்தனை அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களைக் கொண்ட குடும்பங்கள் போன்ற கணக்கு வழக்குகளை இரவோடு இரவாகக் சமர்ப்பிக்கும்படி கேட்டுள்ளன எனத் தெரிகின்றது.

இதனால் உடுவில் பிரதேச செயலக அதிகாரிகள் இரவிரவாக இருந்து வேலை செய்தனர். அப்பிரிவில் உள்ள முப்பது கிராமசேவையாளர்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. தொடர்பில் வராத கிராம சேவையாளர்களின் வீடுகளுக்கு இரவில் வாகனங்கள் பறந்தன. கல்குலேட்டரும் கையுமாக ஓர் அணி செயற்பட்டது.

புள்ளி விவரங்கள் மேலிடத்துக்குப் பறந்தன. வழக்கமாக இத்தகைய முடக்கம் செய்யப்படும் போது – அல்லது தனிமைப்படுத்தல் நடவடிக்கை எடுக்கப்படும் போது – அரச ஊழியர், ஓய்வூதியர் இல்லாத குடும்பங்களுக்கு உடனடி உதவித் திட்டமாக பத்தாயிரம் ரூபா வழங்க வேண்டும்.

அதன்படி பார்த்தால் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒரு கட்டம் இந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு 13 கோடியே ஐம்பது லட்சம் ரூபா தேவை என்பது அண்ணளவாக மதிப்பிடப்பட்டு அறிவிக்கப்பட்டது.

ஒரு பிரதேச செயலர் பிரிவுக்கே இந்தளவு என்றால், முடக்கத்தை அடுத்தடுத்த பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்க வேண்டி நேர்ந்தால் நிலைமை விபரீதமாகும் என்று கணக்கிடப்பட்டதாம்.

இதுதான் முடக்கம் வந்த வேகத்தில் விலக்கப்பட்டதன் சூத்திரம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

எமது செய்தியாளர் ஒருவர் பட்டவர்த்தனமாகவே – நேரடியாகவே – இதனை யாழ் அரச அதிபரிடம் கேட்டுவிட்டார். அவர் பாவம் என்ன செய்வார்? மறுக்க வேண்டியது அவரின் கடப்பாடு. மறுத்துரைத்தார்.

அதுவல்ல விடயம். தேவைப்படும் சமயங்களில் – தேவைப்படும் பிரதேசங்களில் – முடக்கங்களை அறிவிப்பதற்குப் பின்னடிக்கும் நிலையில் ஆட்சிப் பீடம். ஆனால் தொற்றுப் பரவலுக்கு மக்கள் மீது குற்றம் சுமத்துகின்றார் ஆட்சிப் பீடத்தின் மாகாணப் பிரதிநிதியான ஆளுநர்.

இதுநம்துரதிஷ்டமின்றிவேறுயாது.....?

– மின்னல் –

## குடிக்கத் தண்ணீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

மஹர சிறைக் கைதிகள் படுகொலையால் கவலையடைந்தாலும், விசாரணை குழு உறுப்பினர்கள், துணிச்சலாக உண்மையை வெளிக்கொண்டு வந்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இதன்மூலம், இந்த அரசின் மீதான ‘அச்சம் அகலுகின்றது’ எனத் தெரிகின்றது.

இந்தக் கைதிகளின் பல கோரிக்கைகளில் ஒன்று குடிக்கத் தண்ணீர் தாருங்கள் என்பதாகும். இதற்கு முன் ரதுபஸ்வல ஊரில் தண்ணீர் கேட்ட மக்களை இதே கட்சி அரசு சுட்டுக் கொன்றது. இப்போதும் அப்படித்தான்.

ஆகவே, குடிக்கத் தண்ணீர் கேட்டால் சுட்டுப் படுகொலை செய்யும் அரசே இதுவாகும். 69 இலட்ச வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த இந்த ராஜபக்ஷ அரசு, இந்தத் துப்பாக்கிச்சூடு மூலம் மக்களுக்கு ஓர் எச்சரிக்கையை அறிவிக்கின்றது. அதாவது, ‘தங்கம் கேட்டால்கூட, நாங்கள் தந்தாலும் தருவோம். ஆனால், தண்ணீர் கேட்டால் கட்டாயம் சுடுவோம்’ என்பதே அந்த எச்சரிக்கையாகும் – என்றார்.

## முன்னாள் இராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அப்துல்லாஹ் மஹ்ரூப் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரான அப்துல்லாஹ் மஹ்ரூப் மற்றும் பாரூக் அஸ்லம் ஆகியோர் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

லங்கா சதொச நிறுவனம் மேற்கொண்ட முறைப்பாடொன்றுக்கு அமையவே, இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## வெற்றிக்கிண்ணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அணித்தலைவர் திஸர பெரேரா 14 பந்துகளுக்கு 39 ஓட்டங்களையும், தனஞ்சடி சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றனர். லக்ஷான் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

189 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய காலி கிளாடியேட்டர்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதன்படி 53 ஓட்டங்களால் ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி வெற்றிபெற்றது.

அணி சார்பாக, அணித் தலைவர் பானுக ராஜபக்ஷ 40 ஓட்டங்களையும், அஸாம் கான் 36 ஓட்டங்களையும் பெற்றனர். முதல் 3 விக்கெட்டுகளும் 7 ஓட்டங்களுக்குள் வீழ்ந்தது. சிறப்பான ஆரம்பம் இன்மையாலேயே தோல்வியை நோக்கி நகரவேண்டிய நிலை காலி அணிக்கு ஏற்பட்டது.

உஷ்மான் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஹசராங்கவும் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அணித்தலைவர் திஸர பெரேராவிடம் வழங்கிவைத்தார்.

## நேற்றும் 611...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொற்றாளர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 732 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 25 ஆயிரத்து 652 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 920 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து பிரதமரின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் நிறைவிலேயே பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு குறிப்பிட்டார் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கடுவபிடிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 24 வீடுகள் திட்டத்தின் பணிகள் இதுவரை நிறைவடைந்த இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பித்து விரைவில் நிறைவுசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துக்குப் பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார்.

மேலும், காணி உரிமை கொண்டுள்ளவர்களுக்காக மேலும் 5 வீடுகள் கடுபிடிய பிரதேசத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளது.

தாக்குதலில் பாதிக்கப்பட்டு கொழும்பை அணிமித்த பகுதிகளில் வாடகை வீடுகளில் குடியிருக்கும் 33 குடும்பங்களுக்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடப்பட்ட வீட்டுத் திட்டத்திலிருந்து 33 வீடுகளை ஒதுக்கித் தருமாறு பிரதமர் இதன்போது தகவல் வழங்கினார்.

இம்மக்களுக்கு மேலதிகமாக பதுளை, கண்டி உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள தாக்குதலால் பாதிக்கப்பட்ட 11 குடும்பங்களுக்காக அந்தந்தப் பிரதேசங்களில் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பது தொடர்பில் இதன்போது உடன்பாடு எட்டப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்காக ஸ்ரீஜயவர்தன வைத்தியசாலையினால் பெற்றுக் கொடுக்கப்படும் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துவது தொடர்பில் அறிவுறுத்திய பிரதமர், அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் மற்றும் சிகிச்கை அறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் ஒதுக்கீடுகளைக் கொண்டு தற்போது நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ள கடுபிடிய அறநெறி பாடசாலையை 60 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகையை செலவிட்டு நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல், தாக்குதலில் சேதமடைந்த கொச்சிக்கடை தேவாலயத்தில் ஏற்கனவே திட்டமிட்டபடி கடற்படைக்கு ஒதுக்கீடுகளை மேற்கொண்டு நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கும் பிரதமர் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கடந்த அரசு கொச்சிக்கடை தேவாலயத்தை ஒரு புதிய வடிவமைப்பில் நிர்மாணித்து தருவதாகக் குறிப்பிட்ட போதிலும், அது நிறைவு செய்யப்படாமை குறித்த சந்திப்பின்போது வெளிப்படுத்தப்பட்டது.

கடந்த அரசு பல வாக்குறுதிகளை வழங்கியதை மாத்திரமே செய்தது. ஆனால், நாம் உண்மையாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது குறிப்பிட்டார்.

தாக்குதலால் பாதிக்கப்பட்டு கடன் தவணைகளைச் செலுத்த முடியாத, அது குறித்து இதுவரை கோரிக்கைகளை முன்வைத்துள்ள நபர்களுக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடிய கடன் நிவாரணங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தனியார் வங்கிகளுடன் கலந்துரையாடுமாறு பிரதமர், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவுக்கு அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களில் காணப்படும் பிரச்சினைகள் அருட்தந்தை லோரன்ஸ் ராமநாயக்கவால் இந்தச் சந்திப்பின்போது முன்வைக்கப்பட்டது.

கலந்துரையாடலின் நிறைவில் அங்கு கருத்துத் தெரிவித்த பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டதாவது:–

பிரதமரே , நான் உங்களுக்கும் அரசுக்கும் தனிப்பிட்ட ரீதியில் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்து, அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சிக்கும் இந்த வேலைத் திட்டத்துக்கு எமக்கு வழங்கிய ஆதரவு தொடர்பில், விசேடமாக இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் அமைச்சர்களுக்கும், இராஜாங்க அமைச்சர்களுக்கும் நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது மக்கள் பாதிக்கப்பட்டமையினாலேயே நாம் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாத பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கு உங்களது அரசு மற்றும் ஜனாதிபதியின் தலையீட்டுடன் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என நாம் நம்புகின்றோம்.

அது குறித்து நாம் பிரதமர் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். இவ்வாறானதொரு சந்திப்பை ஏற்பாடு செய்தமை குறித்தும் பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் எனக் குறிப்பிட்டார் – என்றுள்ளது.

## சுட்டுக் கொல்லப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வன்முறையில் 11 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டிருந்தனர். அவர்களில் 8 பேருக்கு கொரோனா தொற்றியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 12ஆம் பக்கத்தில்...)

## தாண்டவமாடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் சங்கானை சந்தையைச் சேர்ந்த 100 பேருக்கு நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்த 4 பேர், உடுவில், பண்டத்தரிப்பு, மானிப்பாய், வடலியடைப்பு பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவர் என 8 பேருக்குத் தொற்று உறுதியானது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஏழாலையைச் சேர்ந்த இருவருக்குத் தொற்று உறுதியானது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் கடந்த 6 நாள்களில் 68 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் மருதனார் மடம் பொதுச்சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர்களாவர்.

## நிர்வாக சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட கல்வி வலயங்களில் வடமராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய இரு கல்வி வலயங்களிலும் மூவர் இவ்வாறு அதிபராக பணியாற்றிய நிலையில் நேற்று முன்தினம் முதல் உடனடியாக அவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் பணியாற்றிய 3 பாடசாலைகளின் அதிபர் வெற்றிடத்திற்கு உடன் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

இவ்வாறு அதிபராக பணியாற்றியோர் கல்வி நிர்வாக சேவை தரம் 2இல் தற்போது உள்ளமையோடு, கல்வி நிர்வாக சேவைக்கான தகுதியை பெற்று 5 ஆண்டுகாலம் பூர்த்தியானமையால் அவர்களில் ஒருவர் வாகன அனுமதிக்கும் விண்ணப்பித்த நிலமையினை ஆராய்ந்த வடக்கு மாகாண பிரதம செயலாளர், அதன் பின்னர் வழங்கிய பணிப்பின் பெயரிலேயே இந்த அதிரடி மாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## மேலும் அறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
65 வயது ஆண், கொழும்பு – 09ஐச் சேர்ந்த 48 வயது ஆண் ஆகியோரே கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் 147 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மையினர் மத உரிமைகளுக்கு மதிப்பளிக்க வலியுறுத்திப் போராட்டம்






(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.17

சிறுபான்மை இன மக்களின் மத உரிமைக்கு மதிப்பளிக்க கோரி மன்னாரில் நேற்றைய தினம் புதன்கிழமை காலை அமைதியான முறையில் விழிப்புணர்வு போராட்டம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் (மெசிடோ) ஏற்பாட்டில், அதன் குழுமத்தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் வடகிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் சார்பாக இந்த விழிப்புணர்வுப் போராட்டம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் ஒன்று கூடிய மக்கள் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்திற்கு மன்னாரின் இளம் சட்டத்தரணிகள் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபையின் உப தலைவர், உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த விழிர்ப்புணர்வு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிறுபான்மை இன மக்களின் மத உரிமைக்கு மதிப்பளிக்கக் கோரினர். உயிருடன் இருக்கின்றபோது உடலுக்கு கொடுக்கின்ற மதிப்பினை அவர்கள் மரணிக்கின்ற போது அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்.

மேலும் கொரோனா தொற்று காரணமாக இறந்த உடலங்கள் தகனம் செய்யப்படுகின்றமை உறவினர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்துகின்றது. எனவே உலக சுகாதார ஸ்தாபனத்தின் செயல் திட்டங்களை உள் வாங்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து இந்த விழிர்ப்புணர்வுப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

## மகாஜனாக் கல்லூரியின் 2 மாணவிகளுக்குத் தொற்று; எண்பது மாணவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை!

யாழ்ப்பாணம், நவ.17

மருதனார்மடம் கொத்தணியில் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டவர்களில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவிகளான இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ள நிலையில் கல்லூரி மாணவர்கள் எண்பதற்கும் அதிகமானவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மருதனார்மடம் கொத்தணியில் அடையாளம் காணப்பட்ட கீரிமலை கூவில் பகுதியைச் சேர்ந்த சந்தை வியாபாரி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடைய குடும்பத்தாருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வெளியாகிய பி.சி.ஆர் .முடிவுகளின் அடிப்படையில் குறித்த நபரின் மகள்களான மகாஜனாக் கல்லூரியில் தரம் 09, தரம் 07 இல் கல்வி பயிலும் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த மாணவிகள் இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரிக்குச் சென்று வந்த நிலையில் தரம் 09 மாணவி பரீட்சை ஒன்றுக்காக சனிக்கிழமையும் கல்லூரி சென்று வந்திருக்கின்றார்.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகத் தகவல் வெளியாகிய நிலையில் அந்த மாணவிகளுடன் பயின்ற மற்றும் பழகிய மாணவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், 80 இற்கும் அதிகமானவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 17.12.2020 | வியாழக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

## பெக்கோ இயந்திர விபத்தில் அதனைச் செலுத்தியவர் பலி

வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலிஓயா ஆக்ரோயா பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்குவாரி ஒன்றில் இடம்பெற்ற பெக்கோ இயந்திர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் கல்குவாரி வளாகத்திலேயே இடம்பெற்றுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் பெக்கோ இயந்திரத்தைச் செலுத்துகையில் அது கட்டுப்பாட்டை இழந்து 20 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து, அதன் சாரதியை மீட்டு, உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு உயிரிழந்தவர், மஸ்கெலியா கோர்த்தி பகுதியை சேர்ந்த மொஹமட் அலீம் (வயது - 36) என்ற ஒரு பிள்ளையின் தந்தை எனப் பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

உயிரிழந்தவரின் சடலம் வட்டவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பிரேத பரிசோதனைக்காக அது நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் என தகவல்கள் தெரிய வந்துள்ளன.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மருதங்கேணி சமுர்த்தி வங்கியின் சேவை கணனி மயப்படுத்தப்பட்டது




யாழ் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளை கணனி மயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பணிகளின் அடைவுத்தன்மையில் யாழ் மாவட்டத்தின் 2 ஆவது வங்கியாகவும் தேசிய ரீதியில் 3 ஆவது வங்கியாகவும் திகழும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சமுர்த்தி வங்கியின் சேவைகளை கணனி மயப்படுத்தும் உத்தியோகபூர்வமான முதலாவது நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அரசாங்க அதிபர் கணனி மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையினை ஆரம்பித்து வைத்தார். கணனிப் பதிவுகளை உடைய வங்கிப் புத்தகங்களையும் வாடிக்கையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன், சமுர்த்தி மாவட்ட சிரேஷ்ட முகாமையாளர் ஆ.இரகுநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். மேலும் கண்காணிப்பு முகாமையாளர் ப.பாலகரன், பிரதேச செயலக தலைமை முகாமையாளர் திரு. க.விக்னேஸ்வரன் வங்கிச் சங்க முகாமையாளர் செல்வி எஸ். உதயமதி மற்றும் வங்கி முகாமையாளர் திருமதி வி.திருவருட்செல்வி, வங்கி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஒரு குரலில் பேசுங்கள்!

எதிரெதிரான – பலதரப்பட்ட – கருத்து நிலைப்பாடுகளுக்கு இடமளிப்பதுதான் ஜனநாயகம்.

மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையே பல்வகை கருத்து நிலைப்பாடுகளுக்கும் இடமளிக்கும் – செவிமடுக்க வாய்ப்பளிக்கும் – பண்பில்தான் தங்கியுள்ளது.

எனவே ஜனநாயக நாடு ஒன்றில் ஒரே விடயத்தை ஒட்டி எதிரும் புதிருமான – முரண்பாடான – கருத்து நிலைப்பாடுகளும், கருத்துருவாக்கங்களும் இருப்பது சகஜம். அப்படி இருக்க இடமளிப்பது கட்டாயம்.

ஆனால் நாட்டை நிர்வகிக்கும் ஆளும் தரப்பு – ஆட்சிப் பீடம் – நாட்டின் முக்கிய விடயங்களிலும், தேசியப் பிரச்சினைகளிலும் ஒரு குரலில் பேச வேண்டும். இரட்டை நாக்கில் அல்லது முரண்பாடான நிலையில் பேசக் கூடாது.

ஜனநாயக அரசியலில் எதிரெதிர் கருத்துக்களை அரவணைத்து, உள்வாங்கி, பொது நிலைப்பாட்டை ஏற்படுத்தி, விடயங்களைக் கொண்டு செல்ல வேண்டும். ஜனநாயக முறைமைகளில் ஊறித் திளைத்துத் தேர்ந்த ஆட்சித் தலைவர் ஒருவரினாலேயே அது சாத்தியப்படும்; சாத்தியப்பட முடியும்.

ஆனால், துரதிஷ்டவசமாக நம்நாட்டில் இப்போது நாட்டின் தலைவராக – ஜனாதிபதியாக – இருப்பவர் ஜனநாயகப் பாரம்பரியம் ஒன்றின் ஊடாக வந்தவரல்லர். ஜனநாயக நடைமுறையின் கீழ் ஓர் உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியைக் கூட முன்னர் எதிர்கொண்டவரல்லர். குறைந்தபட்சம் உள்ளூராட்சி சபை, மாகாணசபை, நாடாளுமன்றம் போன்றவற்றுக்கான தேர்தல்களில் நின்றவரோ அல்லது எதிர்கொண்டவரோ அல்லர். உள்ளூராட்சிசபையிலோ, மாகாணசபையிலோ அல்லது நாடாளுமன்றத்திலோ ஒரு நாளாவது ஓர் உறுப்பினராக இருந்து, ஜனநாயக நடைமுறைகளைச் சந்தித்து, அவற்றில் பங்குபற்றிய வரும் அல்லர். நேரடியாக ஜனநாயகத் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதிப் பதவிக்கு வந்தவர்.

அதனாலோ என்னவோ ஜனநாயக மாண்பின்படி எதிரணியின் பல தரப்பட்ட கருத்துக்களைச் செவிமடுக்கச் செய்வதிலும், தேசிய முக்கியத்துவம் மிக்க விடயங்களில் ஆளும் தரப்பின் நிலைப்பாட்டை ஒரு குரலில் ஒலிக்க வைப்பதிலும் அவரின் இயலாமை வெளிப்பட்டு வருகின்றது.

எதிரணியின் கருத்துக்களை அவர் செவிமடுப்பவருமல்லர். தன்னுடைய ஆளும் தரப்பின் கருத்து, ஒற்றை நிலைப்பாட்டில் பிரதிபலிப்பதை அவர் உறுதிப்படுத்துபவருமல்லர்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அவரும் அவரது கட்சியினரும் முரண்பட்ட நிலைப்பாடுகளை மிகத் தாராளமாகவே வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆளும் தரப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல மூத்த அமைச்சர்கள், பிரமுகர்கள் மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்கின்றார்கள். வாசுதேவ நாணயக்கார உட்படப் பலரும் அப்படித்தான் கூறுகின்றனர். அரசின் முடிவும் – அமைச்சரவைத் தீர்மானமும் கூட – அதுதான் என்கின்றார் அமைச்சரவை மற்றும் அரசின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல.

ஆனால், அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர, உதய கம்மன்பில்ல போன்றோர் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்பது மட்டுமல்ல, அதனையும் தாண்டி மாகாண சபை முறைமையே அரசமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று துடிக்கின்றனர். அதுவே மொட்டுக்கட்சி அரசுக்கு ஜனாதிபதித் தேர்தலிலும், கடந்த பொதுத் தேர்தலிலும் மக்கள் அளித்த தீர்ப்பு என்றும் முழங்குகின்றனர்.

நாட்டின் முக்கிய அதிகாரப் பரவலாக்கல் அலகு தொடர்புபட்ட விடயத்திலேயே இப்படி இரட்டை நாக்கில் பேசுகின்றது ராஜபக்ஷ அரசு.

அதேபோல தற்போது தேசிய மட்டத்தில் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது கொரோனாத் தொற்றுச் சிக்கல். கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்களைப் புதைக்க அனுமதிப்பதில்லை என்ற சிக்கல் தொடர்புபட்ட விடயத்திலும் ஆளும் தரப்பு இப்படி இரட்டை நாக்கில் பேசுகின்றது எனக் குற்றம் சுமத்துகின்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான்.

*“கொரோனாத் தொற்றுடன் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கொங்கிறீட் அடக்க அறைகளில் புதைக்க வேண்டும்”* – என்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

*“மாலைத்தீவில் அடக்கம் செய்ய வேண்டும்”* – என்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

*“தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை வரவில்லை”* – என்கின்றார் சுகாதார அமைச்சர்.

*“இப்படிப் பல்வேறு குரல்களில் – இரட்டை நாக்கில் அரசு பேசிக் கொண்டிருக்கின்றது. இதை விடுத்து ஒரு குரலில் – ஒரு தீர்மானத்தில் – பேச அரசு முன்வரவேண்டும். அந்தத் தீர்மானத்தை வர்த்தமானியில் அறிவித்து செயற்பட அரசு முன்வரவேண்டும்.”* – இவ்வாறு முஜிபுர் ரகுமான் மேலும் கூறியிருக்கின்றார்.

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதில் ஒற்றை நிலைப்பாட்டில் – ஒரேகுரலில் – ஒருமித்து, வேகமாகச் செயற்பட்டது அரசு. செயற்படவைத்தார் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி. ஏனென்றால் தன்னுடைய அதிகாரத்தை வலுப்படுத்தித் தன்னை நாட்டின் நிகரில்லாதவராக்கும் நடவடிக்கை அது என்பதனால்.

மாறாக, சிறுபான்மையினத்தவரின் நலன் சார்ந்த தேசியப் பிரச்சினை என்றால் அவரது அரசுத் தரப்பு இரட்டை நாக்கில் – பல கருத்தில் – பேசுகின்றது. இது நாட்டின் துரதிஷ்டமின்றி வேறில்லை.

# மாகாண சபைக்கான தேர்தலை எதிர்கொள்ள சஜித் அணி தயார்

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. அறிவிப்பு



தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே மாகாண சபை முறைமை முன்வைக்கப்பட்டது. எனவே, அதற்கான தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்பட வேண்டும். அதனை எதிர்கொள்வதற்குப் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் தயார்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மாகாண சபைத் தேர்தல் என்பது அரசமைப்பு ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாகும். எனினும், அந்தத் தேர்தல் நீண்ட காலமாக நடைபெறாமல் ஆட்சி அதிகாரம் ஆளுநர்கள் வசம் சென்றுள்ளது. இந்த நிலைமை நீடிக்கக்கூடாது.

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றம் இன்னும் உரிய அனுமதி வழங்காததால் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தேர்தலை நடத்துவதற்கான சட்ட திருத்தத்தை அரசு உடன் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கு நாம் எதிர்ப்பு இல்லை.

எனவே, பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி விட்டு அடுத்து வரும் காலப்பகுதியில் எந்த முறைமையில் தேர்தலை நடத்தலாம் என்பது பற்றிப் பரிசீலிக்கலாம். அந்தவகையில் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார் – என்றார்.

# வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஓமந்தையில் வைத்துக் கைது!





யாழ்ப்பாணம், நவ.17

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களை நடத்திவிட்டு தலைமறைவாகியிருந்த சுமன் என்று அழைக்கப்படும் சந்தேகநபர் ஓமந்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் வைத்து தனுரொக் என்ற மானிப்பாய் இளைஞனை வாளால் வெட்டி கொலை முயற்சி செய்தமை, நீர்வேலியில் உள்ள தனுரொக்கின் நண்பனின் வீடு புகுந்து இளைஞனையும் தாயாரையும் தாக்கியமை, கச்சேரியில் ஊழியர் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியமை உள்ளிட்ட பல வாள்வெட்டு வன்முறைகளுடன் பிரதான சந்தேகநபராக சுமன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில், நேற்று கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், பணத்துக்காக வாள்வெட்டு வன்முறைகளில் தான் ஈடுபட்டார் என விசாரணையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சந்தேகநபரால் யாழ்ப்பாணத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் சந்தேக நபர் தேடப்பட்டு வந்த நிலையில் ஓமந்தையில் தலைமறைவாகியிருந்தமை தொலைபேசி உரையாடலின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், தற்போது யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றார். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# பல்கலை மருத்துவ அதிகாரியாக வைத்தியர் சத்தியலிங்கம் நியமனம்



(ந.லோகதயாளன்)

*யாழ்ப்பாணம்,டிச.17*

*யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ அதிகாரியாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நியமனம் பெறுகின்றார்.*

*யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வவு னியா வளாக மருத்துவ அதிகாரி பணிநிலை வெற்றிடமாகவுள்ளது. இந்த வெற்றிடத்திற்கு கோரப்பட்ட விண்ணப்பத்திற்கு சத்தியலிங்கம் விண்ணப்பித்துள்ளார்.*

*விண்ணப்பித்தவர்களில் அவரே தகுதியானவர் எனக் கண்டு நியமனக் கடிதம் வழங்கப்படுகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அவர் கடமையைப் பொறுப்பேற்கலாம எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகவும் சத்தியலிங்கம் உள் ளமை குறிப்பிடத்தக்கது.*

# ஆட்சிப்பீடம் ஏறிய குறுகிய காலத்திலேயே மக்களின் அதிருப்தியை சந்தித்தது அரசு!

## ருவன் விஜேவர்தன சுட்டிக்காட்டு



ஆட்சிப்பீடமேறி மிகக்குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களின் பெரும் அதிருப்தியை சம்பாதித்துக்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் ருவன் விஜேவர்தன, அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளால் நாட்டின் சட்டம், ஜனநாயகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் கேள்விக்குறியாகியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பாக ஆராயும் நோக்கில் பதுளை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆட்சிப்பீடமேறி மிகக்குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே நாட்டுமக்களின் பெரும் அதிருப்தியை சம்பாதித்துக்கொண்ட ஒரே அரசாங்கம் இதுவாகும். எனினும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் ஆகியவற்றின் ஊடாக மிகவும் வலுவாகத் திகழும் அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு மிகவும் ஸ்திரமான எதிரணியைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் சென்று அரசியல் செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். எந்தவொரு மட்டத்துக்கும் சென்று, கட்சியை மீண்டும் மறுசீரமைப்பதற்கு ஏற்றவகையில் ஆதரவாளர்களைத் திரட்டிக்கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றவேண்டும்.

எதிர்வரும் காலத்தில் மாவட்ட ரீதியாக மாத்திரமன்றி, ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கும் சென்று கட்சி ஆதரவாளர்களை வலுப்படுத்தி, மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளத்தக்க வகையில் கட்சியை மேம்படுத்துவதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன்.

மஹர சிறைச்சாலையில் 11 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் சர்ச்சையாக மாறுவதைத் தடுப்பதற்காக, கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான பானம் தொடர்பில் ஒரு சர்ச்சையை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளால் நாட்டின் சட்டம், ஜனநாயகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் கேள்விக்குறியாகியுள்ளன.

அரசாங்கத்துடன் தொடர்புபட்டவர்களில் ஏற்கனவே குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருந்தவர்கள் சில தினங்களிலேயே விடுவிக்கப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இது நீதிமன்றக்கட்டமைப்பின் நம்பகத்தன்மை மீது பாரிய சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

# சித்திரவதைகளுக்கு எதிரான சட்ட ஏற்பாட்டில் திருத்தம்!

1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கள் அல்லாவிட்டால் தண்டனைகளுக்கு ஆளாக்குவதற்கு எதிரான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப்பணம் சமகாலத்துக்கு பொருத்தமான வகையில் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கள் அல்லாவிட்டால் தண்டனைகளுக்கு ஆளாக்குதல் அரசமைப்புச்சட்டத்தின் 11ஆவது அரசமைப்பின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான செயல்களை மேற்கொள்பவர்களுக்குக் கண்டனம் தெரிவித்தலும், அதற்கு முடிந்தவரை தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும். அதனால், அதுதொடர்பாகத் தற்போது நடைமுறையிலுள்ள 1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைகள் மற்றும் ஏனைய அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கள் அல்லாவிட்டால் தண்டனைகளுக்கு ஆளாக்குவதற்கு எதிரான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப்பணம் சமகாலத்துக்கு ஏற்புடைய வகையில் திருத்தம் செய்வதற்கும், அதற்கான சட்டமூலத்தை தயாரிக்க சட்ட வல்லுநர்களுக்கு ஆலோசனை வழங்கவும் நீதியமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# முஸ்லிமின் இறுதிச் சடங்கை நடத்துவதற்கு அரசு பிறிதொரு நாட்டிடம் கோருவது இழிவு!

## முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சாடல்



நாட்டின் பிரஜையொருவரின் இறுதிச்சடங்குகளைச் செய்வதற்கு உதவுங்கள் என்று பிறிதொரு நாட்டிடம் கோருவது மிகவும் இழிவானதாகும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சாடியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களுக்கான இறுதிக் கிரியைகளை இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைவாக மாலைதீவில் நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலி ஆராய்ந்து வருவதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஹீட் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.

அந்தப் பதிவை மேற்கோள்காட்டி, மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் அந்தப் பதிவில் மேலும் கூறியிருப்பவை வருமாறு :-

'மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் கூறியிருக்கின்றமை உண்மையெனும் பட்சத்தில், எமது நாட்டின் பிரஜையொருவரின் இறுதிச்சடங்குகளைச் செய்வதற்கு உதவுங்கள் என்று பிறிதொரு நாட்டிடம் கோருகின்றமை மிகவும் இழிவானதாகும். நாட்டின் அனைத்து பிரஜைகளும் தமது நம்பிக்கைகளுக்கு அமைவான இறுதிச்சடங்குகளை நடத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர்' என்று மங்கள சமரவீர அந்தப் பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

# டெங்கு நோயாளர்கள் மட்டுவில் அதிகரிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருகின்றது. கடந்த நவம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 04 ஆம் திகதி வரையும் 135 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தால் பாதிப்புக்குள்ளான ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 56 நோயாளர்களும், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 32 நோயாளர்களும், கோறளைப் பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17 நோயாளர்களும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 நோயாளர்களும், மண்முனைப் பற்று ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 நோயாளர்களும், மண்முனை வடக்கு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேரும், வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், வவுனதீவு மற்றும் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருமாக மொத்தம் 135 பேர் டெங்கு நோய் பாதிப்புக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும், ஏறாவூர், செங்கலடி, பட்டிப்பளை, வெல்லாவெளி, கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும், கடந்த 11 மாதங்களில் இந்த மாவட்டத்தில் 2 ஆயிரத்து 847 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த மழைகாலத்தில் பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கி கிடக்கின்ற குப்பைகள் நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காத வகையில் சூழலைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைப்பதற்கு நடவடிக்கைகள்!

*காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சீமெந்து கூட்டுத்தாபனத்தை பார்வையிட சென்ற கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் இது தொடர்பாக தேவையான ஏற்பாடுகளை ஆராய்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தேசிய வருமானத்துக்கு பங்களிக்கக்கூடிய, தற்போது மூடப்பட்டுள்ள உள்நாட்டு தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான செழிப்பு, பார்வை கொள்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*750 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலொன்றால் மூடப்பட்டது.*

*அத்துடன், தற்பொழுது இந்தத் தொழிற்சாலையில் பல இயந்திரங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கைத்தொழில் அமைச்சரின் ஆலோசகர் சுனில் ஹெட்டியாராச்சி, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏக்கநாயக்க உள்ளிட்ட குழுவினர் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன வளாகத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.*

*சீமெந்து கூட்டுத்தாபனம் செயற்பட்ட காலத்தில் பணிபுரிந்த பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.*

# ஜனஸாக்களின் நிலைப்பாட்டை அரசு ஒருமித்துக் கூற வேண்டும்!

## முஜிபுர் ரகுமான் வலியுறுத்தல்




முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கொங்றீட் அடக்கஸ்தலங்களில் புதைக்க வேண்டும் என்று பிரதமர் கூறுகிறார். மாலைதீவில் அடக்கம் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகிறார். தொழில்நுட்பக்குழுவின் அறிக்கை வரவில்லை என்று சுகாதார அமைச்சர் கூறுகிறார்.

இந்த விவகாரத்தில் இறுதித் தீர்வு என்ன என்பதை அரசாங்கம் ஒருமித்துத் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் வலியுறுத்தினார்.

முஸ்லிம்களின் மதநம்பிக்கையின் அடிப்படையில் ஜனஸாக்கள் அடக்கம் செய்யப்பட வேண்டும். ஆகவே அரசாங்கம் இதுதொடர்பாக இறுதித் தீர்மானத்தை அறிவித்து, வர்த்தமானி அறிவித்தலாக வெளியிட வேண்டும். - என்றார்.

# தொற்று முடிவுகள் தொடர்பில் இந்தக் குழப்பங்கள் ஏன்?

அ.கதிரவன்

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களிற்கு ஏற்படும் ஆபத்தான நோய்களில் கூட தமது பதவி இருப்பைத் தக்க வைக்க வேண்டும் என எண்ணும் அதிகாரிகளிடம் இருந்து இந்த மாவட்ட மக்களை காப்பது யார் என்ற பெரும் கேள்விக்கு விடை தெரியாமலேயே உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் முக்கிய சந்தைகளில் மருதனார்மடம் சந்தையும் மிக முக்கியமானது. இந்தச் சந்தைக்கு தினமும் பல்லாயிரக் கணக்கானோர் வந்து செல்லும் நிலையில் எந்தவொரு அடிப்படை சுகாதார ஏற்பாடும் அங்கு முன்னெடுக்கப்படவில்லை என்பதனை அப் பகுதிக்கான நீதிவான் அவதானித்து உடன் பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஏற்பாடுகள் செய்யுங்கள் என பணித்ததன் பெயரில் கடந்த வெள்ளிக்கிழமை (11ஆம் திகதி) சந்தை வர்த்தகர்கள் மற்றும் சந்தைக்கு பொருள் வழங்குநர்களிடத்தில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை இடம்பெற்றது. இதன்போது சந்தையில் விற்பனையிலும் முச்சக்கர வண்டி ஓட்டுநராகவும் பணியாற்றும் ஒருவரில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.




இவ்வாறு தொற்று ஏற்பட்டவரிற்கு அது வந்த மார்க்கம் கண்டுகொள்ள முடியாமல் போனபோதும் உடனடியாக அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டு மறுநாள் சந்தை வர்த்தகர்கள் மற்றும் இவரது குடும்பம் உள்ளிட்டவர்களிடம் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த பெறுபேறுகள் வழமை போன்று போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஊடாக வெளிவரும். இருப்பினும் குடாநாட்டின் மத்தியில் என்பதனால் மருத்துவர்களை விட மக்களும் ஊடகவியலாளர்களும் அதன் நிலைமையை அறிய ஆவலாக இருந்தனர். இந்தத் தேடுதலின் பயனாக மருத்துவரிற்கு முன்பு ஊடக தகவல் 31 பேருக்கு (12 ஆம் திகதியான அன்று) கொரோனா உறுதி என்ற தகவல் வெளி வந்தது.

இந்தத் தகவல் வேகமாக பரவிய சமயம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறிவிப்போ 6 பேரிற்கு மட்டுமே கொரோனா உறுதி செய்யப்பட்டதாக இருந்தது. அவரின் அறிவித்தல் அப்படி வெளிவந்தமையினால் 31 பேருக்கு கொரோனா என செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர்களில் பலர் ஐயம் கொண்டனர். சிலரோ அச்சம் கொண்டனர். தாம் வெளியிட்ட செய்தியை உடன் எண்பிக்க முடியாத ஊடகவியலாளர்கள் தமது செய்தியில் திருத்தம் செய்தனர். ஒரு சிலரோ தாம் கூறிய கூற்றில் திடமாக இருந்து போராடி ஆதாரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டனர். இதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடமே தொடர்பு கொண்டு கேட்டபோதும் ஆறு பேருக்கு மட்டுமே கொரோனா என பணிப்பாளர் சத்தியம் செய்யாத குறையாகக் கூறிவிட்டார்.

இதன் உண்மையை வெளிக்கொணர்வது மட்டுமன்றி ஆதாரப்படுத்தவும் முயற்சிக்கப்பட்டது.

இந்த முயற்சிகளை அறிந்த பணிப்பாளர் மீண்டும் ஓர் அறிக்கை விட்டார் இன்றைய தினம் (அதாவது கடந்த சனிக்கிழமை 12 ஆம் திகதி பரிசோதனை மேற்கொண்டவர்களில் 104 பேருக்கு மீண்டும் சோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டது. இதனால் மேலும் சந்தேகம் கொண்டு தேடுதலில் ஈடுபட்ட சமயம் ஞாயிற்றுக் கிழமை காலை அதாவது 13.12.2020 அன்று கொரோனா மத்திய செயலணியின் செய்திக் குறிப்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 12.12.2020 அன்று 36 பேருக்கு கொரோனா என்ற தகவல் புள்ளி விவரமாக பதியப்பட்டு இருந்தது. இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை இனி நம்பி பயன் இல்லை என்ற முடிவிற்கு வந்த சில ஊடகவியலாளர்கள் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டனர்.

இந்த தொடர்பிற்கு மாகாணப் பணிப்பாளர் கூறிய பதில் மேலும் நகைப்பை ஏற்படுத்தியது.

அதாவது செயலணியின் தரவில் யாழ்ப்பாணத்தில் 12 ஆம் திகதி 36 பேருக்கு கொரோனா என பதிவிட்டுள்ளமை தொடர்பில் நாம் வினாவியபோது, ஊடகங்களின் பதிவை பார்த்து அப்படித் தரவேற்றம் செய்துவிட்டோம், அதனைச் சீர் செய்கிறோம் என்று செயலணி பதிலளித்துள்ளது என மாகாணப் பணிப்பாளர் கூறினார். எனினும் அன்று முழுவதும் அந்தத் தரவு மாற்றப்படவே இல்லை என்பதோடு இன்று வரையும் கூட மாற்றப்படவில்லை.

இவ்வாறு மாறுபட்ட குழப்பம் நிலவியபோதும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை 13 ஆம் திகதி மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேறுகள் வெளியீட்டின் போது யாழில் 26 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டதாக போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல் வெளியிட்டார். இப்போது ஆறும், இருபத்தியாறுமாக, ஆக ஊடகவியலாளர்கள் வெளிக்கொணர்ந்த 31இன் பெறுபேற்றுடன் மேலும் ஒன்று இணைந்து 32 தொற்றுப் பற்றிய பெறுபேறும் வெளிவந்து விட்டது.

இத்தனை மாறாட்டங்களின் பின்பும் உண்மையை வெளிப்படுத்தாத அதிகாரிகள் பக்கம் ஏதும் நியாயம் உண்டா எனக் கண்டறிய 14ஆம் திகதி காலை கொரோனா செயலணியின் இணையத்தை கிளறியபோது 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் எவருக்குமே கொரோனா ஏற்பட்டதான பதிவே அதில் இருக்கவில்லை. அவ்வாறானால் 12ஆம் திகதி போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உண்மைக்கு மாறாக உரைத்தமை மட்டுமன்றி போதனை வைத்தியசாலைப் பணிப்பாளரைக் காப்பாற்றும் நோக்கில் 13ஆம் திகதி மாகாணப் பணிப்பாளரும் அவ்வாறே உரைத்தார் என்ற முடிவிற்கே வரவேண்டிய நிலமைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இங்குதான் பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன் போகுது என்ற பழமொழி கச்சிதமாக பொருந்துகின்றது. இந்த அதிகாரிகளிற்கு இவை நாளாந்தப்




பணி. ஆனால் பாதிக்கப்படும் மக்களிற்கோ அது உயிர்.

எந்தத் துறையிலும் போட்டியாளர்கள் அதிகரித்தால் ஓர் இடத்தில் மறைக்கப்படும் உண்மை மறுமுனையால் வெளிப்படுத்தப்படும். அது ஊடகத்துறைக்கும் கூடப் பொருந்தும். ஆனால் வைத்தியத் துறையில் மட்டும் அது பாலுடன் கலப்படம் செய்யப்படும் நீராகவே மாறும். அங்கு, தண்ணீரிலிருந்து பாலைப் பிரிப்பது போல, பிழைகளில் இருந்து சரிகளை வேறுபடுத்திக் காட்டப் போகின்றவர் யார், அந்த அன்னப் பறவை யார் என்பதே கேள்வி.

இவ்வாறான மற்றுமோர் உதாரணம் கடந்த ஆண்டு மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற தவறான சிகிச்சை.

தவறான சிகிச்சைதான் இடம்பெற்றது என அறிக்கை இடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலும் பாதிக்கப்பட்டவருக்கு எந்த நிவாரணமும் கிடையாது. அரசிற்கும் சுகாதாரத்துறைக்கும் மரியாதை குறைவு ஏற்படும் எனக்கூறி அந்த விடயம் மூடி மறைக்கப்படுகின்றது. மாதக் கணக்கில் வீடு செல்ல முடியாமலும் , நேரக் கணக்கில் உணவிற்கு கூட மாட்டிய உடையை அகற்ற முடியாமலும், மனைவியை இன்னுமொரு மருத்துவத்திற்கு அனுமதித்து விட்டு தனது சிகிச்சை பணியில் ஈடுபடும் மருத்துவர்கள், ஏன் சொந்தப் பணத்தில் பிறருக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் மத்தியில் நிர்வாக அதிகாரிகளின் தவறுகள் ஒற்றைச் சொல்லில் பழியை சுமத்துகின்றன.

Committee of Preliminary Investigation,
30.01.2019

Director,
District General Hospital,
Mannar.

**Report of the Preliminary Investigation**
**Mr. W. P. G. D. Hassantha – Nursing Officer**

This is related to the powers vested to us by your letter bearing No. MN/DGH/AO/19 dated 14.01.2019 and according to the Chapter XLVIII Section 13 of the Establishment Code, the investigation has been carried out on the above subject.

**Committee of Inquiry**

| | | | |
|---|---|---|---|
| 1. | Dr. T. Osmand Teny | President | (Deputy Director – Acting) |
| 2. | Dr. W. T. P. K. Wijesinghe | Member | (Medical Officer – OPD) |
| 3. | Mr. M. J. Roche | Member | (Administrative Officer) |
| 4. | Mr. C. A. B. Croos | Member | (Matron) |
| 5. | Mrs. Wijayathevi Edward | Member | (Matron) |

**Date of Inquiry - Venue**

1. 24.01.2019 – District General Hospital, Mannar

**Those who were inquired**

1. Mr. W. P. G. D. Hassantha - Nursing Officer
2. Mrs. E. Sasilda - Nursing Officer

**The Documents examined**

1. BHT - 417/417 - 06.01.2019 (Medical Ward No. 07)
2. OPD – Chit No. 642 – 02.01.2019

**Annexures**

1. Copy of the appointment letter of the Committee of Inquiry
2. Statement – Mr. W. P. G. D. Hassantha - Nursing Officer
3. Statement – Mrs. E. Sasilda - Nursing Officer
4. Copy of the complaint received
5. Draft – Charge Sheet
6. Public Administration Circular 14/2014

**The faults committed by the Officer**

1. It revealed that he has committed 'carelessness' that comes under Section II Annexure I of Establishment Code.
2. He has caused loss to the State.

**Recommendation of the Committee of Inquiry**

1. 'Warning the Nursing Officer concerned severely'
2. The cost of injection that was used without the permission of a doctor plus 25% to be recovered from the Nursing Officer concerned and to be deposited under Government Revenue (Financial Regulation – 105 (1) 'E')

| | |
|---|---|
| Cost of the injection | Rs. 1,347.55 |
| Departmental expenditure 25% | Rs. 336.88 |
| Total | Rs. 1,684.43 |

1. Dr. T. Osmand Teni - Chairman (Deputy Director-Act.)
2. Dr. W.T.P.K. Wijesinghe - Member (Medical Officer – OPD)
3. Mr. M. J. Roche - Member (Admin. Officer)
4. Mr. C. A. B. Croos - Member (Matron)
5. Mrs. Vijayadevi Edward - Member (Matron)

**POSITIVE CASES ON 14 DEC 2020 (LAST 24 HRS)**

| SER | DISTRICT/OTHER SPECIAL CASES | NOs REPORTED DURING LAST 24 HRS | TOTAL NUMBER FROM 4 OCT |
|---|---|---|---|
| DISTRICTS | | | |
| 1 | COLOMBO | 444* | 14,551 |
| 2 | KALUTARA | 19 | 1,823 |
| 3 | GAMPAHA | 75** | 7,526 |
| 4 | KANDY | 01 | 1,034 |
| 5 | RATHNAPURA | 05 | 463 |
| 6 | KURUNEGALA | 22 | 498 |
| 7 | AMPARA | 41 | 431 |
| 8 | MATARA | 02 | 72 |
| 9 | PUTTALAM | 03 | 348 |
| 10 | BATTICALOA | 01 | 82 |
| 11 | TRINCOMALEE | 01 | 44 |
| 12 | ANURADHAPURA | 04 | 143 |
| 13 | MONARAGALA | 01 | 26 |
| 14 | MATALE | 04 | 67 |
| 15 | IMPORTED CASE | 05 | - |
| 16 | CASE WHICH THE AREA/ CATEGORY NOT IDENTIFIED YET | 27 | - |
| TOTAL | | 655 | |

**POSITIVE CASES ON 13 DEC 2020 (LAST 24 HRS)**

| SER | DISTRICT/OTHER SPECIAL CASES | NOs REPORTED DURING LAST 24 HRS | TOTAL NUMBER FROM 4 OCT |
|---|---|---|---|
| DISTRICTS | | | |
| 1 | COLOMBO | 397* | 14,107 |
| 2 | KALUTARA | 136 | 1,804 |
| 3 | GAMPAHA | 50 | 7,451 |
| 4 | KANDY | 55** | 1,033 |
| 5 | RATHNAPURA | 15 | 458 |
| 6 | KURUNEGALA | 04 | 454 |
| 7 | AMPARA | 02 | 390 |
| 8 | GALLE | 07 | 389 |
| 9 | PUTTALAM | 03 | 345 |
| 10 | KAGALLE | 05 | 280 |
| 11 | NUWARA ELIYA | 06 | 224 |
| 12 | ANURADHAPURA | 02 | 139 |
| 13 | JAFFNA | 36 | 120 |
| 14 | BADULLA | 02 | 71 |
| 15 | IMPORTED CASE | 05 | |
| 16 | CASES WHICH THE AREA/ CATEGORY NOT IDENTIFIED YET | 35 | |
| TOTAL | | 760 | |

## காணாமல்போனவர்கள் தொடர்பில்

# கோட்டாவும் சவேந்திர சில்வாவும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்

### ஜஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டு



“இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் காணாமல்போன நூற்றுக் கணக்கான தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் குறித்து சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டத்தின்படி பொறுப்புக்கூற வேண்டியவர்கள். - இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் அறிவித்துள்ளது.

காணாமல்போனவர்கள் பற்றிய அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை யின்படி இறுதிக்கட்டப் போரில் 330 தமிழர்களும், 1989 இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் 154 சிங்களவர்களும் காணாமல்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் காணாமல்போனவர்கள் பற்றிய இந்த அலுவலகத்தின் அறிக்கையில் பெரியளவில் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன என்றும் சர்வதேச உண்மைக் கும் நீதிக்குமான திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது, எங்கு இருக்கின்றார்கள் என்ற உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை குடும்பங்களுக்கு உண்டு எனக் குறித்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

அத்துடன் வலிந்து காணாமல்போதல் என்பது ஒரு குற்றம் என்பதால் இறுதிப் போரில் கட்டளைப் பொறுப்பில் இருந்த இராணுவ அதிகாரிகளுக்கும் யாருடைய பொறுப்பில் கீழ் அவர்கள் சரணடைந்தார் களோ அந்த அதிகாரிகளுக்கும் சரணடைந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை எவ்வாறு தொலைந்து போக விட்டார்கள் என்பதைப் பற்றி விளக்கம் தருவதற்கான சட்ட ரீதியான கடப்பாடு உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 1989 இல் ஜனாதிபதி பொறுப் பாக இருந்தபோது மாத்தளையில் இருந்து பல சிங்கள இளைஞர்கள் ஏன் காணாமல் போனார்கள் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை மக்களுக்கு விளக்கமளிக்கப் போகின்றாரா என்றும் ஜஸ்மின் சூக்கா கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்தோடு அரசின் இந்தக் காணா மல்போனவர்களின் பட்டியல்கள் இலங் கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பதவியில் இருந்த வெளியேறிச் சென்ற பின்னர் ஒரு நாள் ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடர முடியும் என்பதையும் காணாமல் போனவர்களின் பட்டியல்கள் காட்டுகின்றன என்றும் ஜஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.

# 24 மணி நேரத்தில் கொழும்பு மாநகரில் 309 கொரோனா தொற்றாளர்கள்!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் 688 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில், கொழும்பு மாவட்டத்தில் 309 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 104 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் இருவரும் அம்பாறை மாவட்டத்தில் நால்வரும் புத்தளம் மாவட்டத்தில் ஒருவரும் மட்டக்களப்பில் ஒருவரும் திருகோணமலை மாவட்டத்தில் ஒருவரும் மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 309 பேரில் கிருலப்பனையில் 14 பேரும் வெள்ளவத்தையில் 19 பேரும் பொரளையில் 24 பேரும் தெமட்டகொடையில் 11 பேரும் மருதானையில் 25 பேரும் புளூமென்டல் பகுதியில் 13 பேரும் கிரேண்ட்பாஸ் பிரதேசத்தில் 69 பேரும் மட்டக்குளியில் 62 பேரும் புறக்கோட்டையில் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தின் வத்தளையில் 06 பேரும் களனியில் நால்வரும் மினுவாங்கொடையில் இருவரும் மஹர பகுதியில் 68 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 121 ஆக அதிகரித்துள்ளதோடு, தொற்றிலிருந்து 24 ஆயிரத்து 867 பேர் குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யானைக்கு வைத்த மின்கம்பியில் சிக்கி திருமலை இளைஞன் சாவு!



திருகோணமலை, பன்குளம் பகுதியில் யானைக்கு வைத்த மின் கம்பியில் சிக்கி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி நகர்ப் பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் கிருாந்தன் (வயது 25) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பன்குளம் ஆறாம் வாய்க்கால் பகுதியில் அவரின் தாயின் தங்கையின் (சித்தி) வீட்டில் வேலைக்காக சென்றிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# வவுனியாவில் பாடசாலை மாணவிக்கு கொரோனா 35 மாணவர்கள், 12 ஆசிரியர்கள் தனிமைப்படுத்தல்

வவுனியா கற்குழியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், நகர பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

குறித்த மாணவி வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்.

இவர் வேறு நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் அவருக்கு எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இதனிடையே, குறித்த மாணவி கடந்த மூன்று மாதங்களாக பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை என பாடசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

எனினும் நேற்றையதினம் பாடசாலைக்கு அவர் சென்று கல்வி செயற்பாடுகளில் பங்கெடுத்துள்ளார் என்றும் இதன்போது இரண்டு வகுப்புகளை சேர்ந்த 35 மாணவர்களை ஒன்றாக இணைத்து பாடம் கற்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அந்தவகையில் அந்த மாணவிக்கு 12 ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர். எனவே ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா அச்சம் காரணமாக வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட புளியங்குளம் இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஐந்து பாடசாலைகள் ஏற்கனவே மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.











# நீதித் துறைக்கு இரு நூறு கோடி ரூபா வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு

## நீதி அமைச்சர் தகவல்

நீதித்துறைக்கு இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் சுமார் 200 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மதுகமவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டடத்தொகுதிகள விஜயத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மக்களுக்கு இலகுவாகவும் குறுகிய காலத்திற்குள்ளும் தமது நீதிமன்ற நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

இதற்காக ஜனாதிபதியினதும் பிரதமரினதும் வழிகாட்டலின் கீழ் பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

குறுகிய காலததுக்குள் அரச பகுப்பாய்வு அறிக்கையை வழங்குவதற்குத் தேவையான பௌதீக வளமும் மனித வளமும் மேம்படுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். அத்தோடு அபராத முறையையும் மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

# வவுனியா மக்கள் பிரச்சினை ஜனாதிபதியிடம் முன்வைப்பு!

## திலீபன் எம்.பி நேரில் தெரிவிப்பு

வவுனியா. டிச. 17.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் ஜனாதிபதியிடம் வன்னி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளை நேரடியாகத் தெரியப்படுத்தினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை முன்வைத்துள்ளார்.

இதன் பிரகாரம் அபிவிருத்தி குழு தலைவர்கள் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களுக்கு அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும், இதன் மூலமே மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வர வசதியாக இருக்கும் எனவும் தெரிவித்தமையுடன் நீண்ட காலமாக மக்கள் வாழும் காணிகளில் இருந்து வனவளத்திணைக்களம் வெளியேறுமாறு கூறுவதால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை யும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.



இதனை செவிமெடுத்த ஜனாதிபதி இவ்வாறான நிலை காணப்படும் பட்சத்தில் அதனைச் சீர் செய்வது தொடர்பிலும் உத்தரவாதமளித்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டு சென்றுள்ளார் என்று அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் அரச சட்டத்தரணிக்கு கொரோனா!

வவுனியா. டிச. 17.

வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் அரச சட்டத்தரணி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கல்முனையைச்சேர்ந்த அவருக்கு கடந்த (செவ்வாய்க் கிழமை) பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எனினும் குறித்த சட்டத்தரணி வவுனியா விலிருந்து கல்முனைக்குச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை சுகாதாரத் துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை வவுனியா நீதிமன்ற செயற்பாடுகள் ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையுடன், மேல் நீதிமன்றத்தின் ஏனைய ஊழியர்களுக்கும் பி.சி. ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவில் இருந்து எம்மைப் பாதுகாப்போம்!



## சமூக நல அறிவிப்பு

இந்த வைரஸ் வருவதற்கு முன்பும் வந்த பின்பும் என்னென்ன தடுப்பு முறைகள் சரியானவை என்பது பற்றி நாம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இவை நிச்சயம் உங்கள் அச்சத்தை போக்கும் என்பதோடு உங்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும் உதவும்.

**கொரோனா எனப்படும் கொவிட் - 19 வைரஸ் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு இன்னும் தேவைப்படுகிறது.**

- **கொரோனா தொற்று ஏற்படாத வண்ணம் மக்கள் தங்களைக் கவனமாகப் பாதுகாத்துத் தங்கள் வேலைகளைத் தொடரும்படியான அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கு மனதளவில் நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.**
- **அறிவுரைகளையும் பாதுகாப்பு நெறிமுறைகளையும் சட்டை செய்யாமல் தங்கள் விருப்பம் போல சுற்றித் திரிவது, கட்டித் தழுவுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.**
- **சானிடைசர் இருக்கும் இடத்தில் எல்லாம் அதைப் பயன்படுத்த வேண்டும். வீட்டிற்கு வந்தவு டன், சோப் கொண்டு கை கழுவ வேண்டும்.**
- **மக்கள் நெருக்கம் நிறைந்த இடங்களில் - குறிப்பாக கட்டடங்களுக்குள் இருக்கும் கூட்டங்களுக்கு - போகாமல் தவிர்க்க வேண்டும்.**

இந்த நான்கு நெறிமுறைகளையும் தவறாமல் முழு ஈடுபாட்டுடன் கடைப்பிடிப்பதன் மூலம், தொற்று ஏற்படாமல் நிச்சயமாக தவிர்க்க முடியும்.

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்

## அவதாரத்தை இனங்கண்ட செவிலித்தாய்



**ஏழைகளில் இறைவனைக் காணுங்கள்;**
**உண்ண உணவு வழங்குங்கள்.**
**ஏழைகளில் இறைவனைக் காணுங்கள்;**
**உடுக்க உடை வழங்குங்கள்.**
**ஏழைகளில் இறைவனைக் காணுங்கள்;**
**பிணிநீங்க மருந்து வழங்குங்கள்.**
**ஏழைகளில் இறைவனைக் காணுங்கள்;**
**அவர்தம் துன்பம் போக்குங்கள்.**

இவ்வாறு தனது அடியார்களுக்கு ஆணையிட்டவர் சாயிபாபா. ஏழை பங்காளன் எங்கள் பாபா. தனது 60 ஆவது பிறந்த தினத்தன்று பாபா விடுத்த வேண்டுகோள் அவரது உள்ளக்கிடக்கையை உலகுக்கே உணர்த்துகிறது.

'இந்நாளன்று எனக்குள்ளது ஒரேயொரு அவா. அது ஆனந்தம் எங்கும் பரவவேண்டும் என்பதே. சாயி அமைப்புக்கள் 6,000 பின்தங்கிய கிராமங்களை தத்தெடுத்து, நன்கு திட்டம் வகுத்து, மக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து, அவற்றை மாதிரிக் கிராமங்களாக மாறச் செய்யவேண்டும். மக்கள் வாழ்க்கையில் ஆனந்தம் மலரட்டும்!

சாயீஸ்வரம் யாத்திரை வந்த அடியார்கள் 'பாபாவின் இக்கனவை நனவாக்குவோம்' என்று பிரசாந்தி நிலைய புண்ணிய பூமியில் சத்தியம் செய்கின்றனர். அதனைத் தொடாந்து பாபாவின் இளமைக்கால வாழ்க்கையை அறிகின்றனர்.



சீரடி சாயிபாபா விஜயதசமி நாளன்று 1918 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி சமாதி அடைந்தார். அவ்வேளை, 'நான் எட்டாண்டுகளில் அவதரிப்பேன' என்று அவர் தனக்கு நெருக்கமான பக்தனான பம்பாயைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர் காக்கா சாகிப்டிக்ஸிட் என்பவரிடம் கூறியிருந்தார். 'நான் போய்வடுவேன் என்று எண்ணாதீர்கள். எட்டாண்டுளில் சிறுவனாக வருவேன்'. இவ்வாறு சீரடி சாயிபாபாவின் சத்சரிதையில் உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

அக்கூற்றுக்கு அமைய சத்தியசாயி பாபா சரியாக எட்டாண்டுகளின் பின்னர் 1926ல் பிறந்தார். பாபாவை அவதாரமென்று ஆரம்பத்திலேயே உணர்ந்தவர்களில் அவரது செவிலித்தாய் சுப்பம்மா என்ற நல்லாளும் ஒருவராவர். பாபாவின் வீட்டுக்கு அருகே கர்ணம் குடும்பத்தினர் வாழ்ந்தனர். கர்ணம் அந்தக் கிராமத்து அரசாங்க அலுவலராக கிராம அதிகாரியாகத் தொழில் பார்த்தார். அவர்கள் பிராமணர்கள். சைவ உணவு உண்பவர்கள். சுப்பம்மா நிறைந்த செல்வமுடையவர். அவ்வாறே உன்னத குணங்கள் நிறைந்தவர். பணமும், பண்பும் ஒருங்கே அவரிடம் காணப்பட்டன.

'இறைவன் தந்தது எந்தன் சொத்து இதனை இதர மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டவர். குழந்தைப் பேறற்ற சுப்பம்மாவிற்கு குழந்தை சாயியை மிகவும் பிடித்திருந்தது. அவ்வாறே சாயி குழந்தைக்கும் சுப்பம்மாவைப் பிடித்திருந்தது. சைவ உணவுப் பிரியரான சத்திய நாராயணண் அடிக்கடி சுப்பம்மா வீட்டுக்குச் சென்றான். சுப்பம்மா காட்டிய அன்பில் திளைத்தான்.

சாயியை அடிக்கடி உணவுண்ண அழைத்தார் சுப்பம்மா. ஒரு தடவை நான் இன்று தோசை சுட்டுள்ளேன், வீட்டுக்கு வந்து உண்ணவும் என்று பாபாவை அழைத்தார். அக்காலத்தில் அனைவரது வீடுகளிலும் இட்லி, தோசை இலகுவில் கிடப்பதில்லை. சில வசதியுள்ளவர்களின் வீடுகளிலேயே அவை கிடைத்தன. எனவே அவர் அவ்வாறு அழைத்த போது பாபா இப்படிச் சொன்னார் 'இந்த பஜன் குழுவினரை விட்டுவிட்டு நான் மட்டும் எவ்வாறு வருவது?' இவ்வாறு பாபா சொல்ல, அனைவரையும் அழைத்து தோசை விருந்து கொடுத்தார். இவ்வாறு விருந்தோம்பலிலும் விருப்பம் உடையவராக இருந்தார் சுப்பம்மா.

பாலசாயியின் செயற்பாடுகளைக் கண்டு பெற்றோரும், உற்றாரும், மற்றோரும் இது என்ன விசித்திரம் என்று மிரண்ட போது, அவை சாயி லீலை என்று அன்றே உணர்ந்தவர் அவர். புரிந்து கொண்டவர் சுப்பம்மா. இவருக்கு பாலசாயி பற்றி எவ்வித ஐயமும் இருக்கவில்லை. அவர் பாபாவின் பாதங்களைத் தனது குருவின் பாதங்களாக இறைவனின் திருவடிகளாக அன்றே பற்றிக்கொண்டவர். பாபாவைக் கலியுக அவதாரம் என்று உறுதியாக நம்பியவர்.

உரவக்கொண்டாவில் மேமாதம் 23 இல் சத்தியா தனது சத்தியத்தைப் பிரகடனம் செய்தார். 'நான் சாயி பாபாவின் மறுஅவதாரம்' என்றார். சத்தியா யாரிடமோ மல்லிகைப் பூக்கள் கொண்டுவருமாறு கோரினார். யாரோ அவற்றை வழங்க, அவர் அவற்றைப் பூமியில் வீச, அவை தெலுங்கு மொழியில் 'சாயிபாபா' என்னும் சொற்றொடராக வடிவம் பெற்றன.

இதனைத் தொடர்ந்து அயலிலுள்ள நகரங்கள் கிராமங்களிலிருந்த மக்கள் திரள்திரளாக வருவது கண்டு சுப்பம்மா சித்திராவதி நதிக்கரையில் தனக்குச் சொந்தமான காணியை வழங்கி அதில் ஒரு பெரிய குடிலையும் அமைக்க ஒழுங்கு செய்தார். அது மட்டுமல்லாமல் பாபாவிடம் வரும் பக்தர்களுக்கு உறையுளும் உணவும் கொடுத்து அவர்களை உபசரிக்க வேண்டும் என்பதில் கரிசனையாக இருந்தவர். அவரது சமயலறை ஓய்ந்ததே இல்லை.

ஒரு தடைவ சுப்பம்மாவிடம் 'நீ சீரடியைப் பார்க்க விரும்புகிறாயா?' என்று பாபா கேட்டார். அவளும் ஆம் என்று பதிலளித்தாள். உடனே அந்தக் காட்சியை அவர் காட்டினார். மலர்களால் அரங்கரிக்கப்பட்ட ஒரு சமாதி. சாம்பிராணிப் புகை நறுமணம் எங்கும் கமழ்ந்து கொண்டிருந்தது. ஒரு மூலையில் ஒரு அடியார் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அருகே ஆஞ்சநேயர் ஆலயம். வெகு தொலைவில் ஒரு வேப்ப மரம். இதுவே சுப்பம்மா கண்ட சமாதிக் காட்சி.

சுப்பம்மா பாபாவிடம் ஒரு வேண்டுகோளை முன் வைத்திருந்தார். தனது இறுதி நேரத்தில் பாபா தரிசனம் தனக்கு கிடைக்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாகும். பாபாவும் அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். தன்னுடைய இறுதிக்காலத்தில் சுப்பம்மா நோயுற்றார். இருப்பினும் ஒரு மாட்டுவண்டிலில் அப்போது கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பிரசாந்தி நிலையத்திற்கு வந்து போனார். சிலகாலம் கழித்து நோய் மோசமடையவே எழுந்து நடக்க முடியாதவாறு படுக்கையில் கிடந்தார். அவருயிர் பிரிந்து விட்டதாக எல்லோரும் கருதினர்.

அப்பெழுது பாபா பங்களூரில் இருந்தார். உடனடியாக பாபா இங்கு வந்தார். சுப்பம்மா இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டு மூன்று நாள்கள் கழிந்துவிட்டன. அவளருகே சென்றார். 'சுப்பம்மா சுப்பம்மா' என்று இரண்டு தடவைகள் குரல்கொடுத்தார். எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் சுப்பம்மா கண் விழித்துப் பார்த்தாள். தனது கைகளினால் பாபாவின் திருக்கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள். பாபா தனது விரல்களினால் கங்கைநதித் தீர்த்தத்தைச் சுப்பம்மாவின் வாயினுள் ஊற்றினார். அவள் நிம்மதியாக உயிர் பிரிந்தாள்.

(தொடரும்...)

# முல்லை மக்களை பட்டினிக்கு தள்ளுகின்றது கோட்டா அரசு!

## ரவிகரன் காட்டம்

இலங்கை அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்துத் தமிழ் மக்களையும் பட்டினிச் சாவு நெருக்கடிக்குள் தள்ளுவதாகவே அமைந்துள்ளதாக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி (எல்), வன ஜீவராசி, வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பன தமிழ் மக்களின் வாழ்வாதாரக் காணிகளையும், வளமான பகுதிகளையும் அபகரித்து தமிழ் மக்களின் வழ்வாதாரத்தை சூறையாடியுள்ளன. இந்நிலையில் தற்போது தமிழ் மக்களின் கடல் வளமும் வேற்று நாட்டவரால் சிதைக்கப்படுகின்றது. இதையும் அமைதியாக இருந்து வேடிக்கை பார்கின்றார்கள். இது எமது மக்களை பட்டினிச்சாவு நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடாகவே தாம் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில், இந்திய மீனவர்களின் அத்து மீறிய கடற்றொழில் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதனைவிட மகாவலி (எல்) என்ற போர்வையில் இங்கு காணிகள் அபகரிக்கப்படுகின்றன. எனினும் மகாவலி நீர் இங்கு கொண்டுவரப்படவில்லை. வன திணைக்களம் என்ற பெயருடன் எங்களுடைய காடுகள் அபகரிக்கப்படுகின்றன.

இதேவேளை எமது மாவட்டத்திலுள்ள தமிழர்களின் பூர்வீக இடங்கள், அந்தப் பூர்வீக இடங்களிலுள்ள வரலாற்றுத் தொன்மைமிக்க கல்வெட்டுக்கள், கற்பொழிவுகள் கட்டடச் சிதைவுகளை தொல்லியல் திணைக்களத்தினர் தொல்லியல்சார் இடங்களென அபகரிப்பதுடன் பௌத்த மதத் திணிப்பை மேற்கொள்கின்றனர்.

இவை அனைத்தையும் அபகரித்தது போதாதெனத் தற்போது எங்களுடைய கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை தடுக்கின்ற செயற்பாட்டை செய்வதற்கு கடற்படையினரோ உரியவர்களோ தயங்குகின்றனர். அதன் மூலம் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்றார்கள்.

இதே நிலை தென்னிலங்கையில் காணப்பட்டால், அங்குள்ள கடற்பரப்புக்களிலே இவ்வாறு வேற்று நாட்டு மீனவர்கள் வருகைதந்து மீன்பிடியில் ஈடுபட்டால் இலங்கை அரசும், பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும், கடற்படையினரும் இவ்வாறுதான் வேடிக்கை பார்ப்பார்களா? நிச்சயமாக அவ்வாறான நிலை காணப்படாது. – என்றார்.

# திருக்கணிதக் கணிப்பை உறுதிப்படுத்தும் நிகழ்வு

வானில் நிகழும் அரிதான நிகழ்வு எதிர்வரும் 21-12-2020 திங்கட்கிழமை இடம்பெறுகின்றது. அன்று குரு, சனி ஆகிய இரு கிரகங்களும் மிக நெருக்கமாகச் சஞ்சரிக்கும் நிகழ்வு இடம்பெற இருப்பதாகவும், இந்நிகழ்வு பல வருடங்களின் பின்னர் ஏற்படவுள்ளதாகவும் இக்கிரகங்களின் சேர்க்கையாக நேரடியாக வானத்தில் அவதானிக்கலாம் என்றும் ஆத்தர். சி. கிளார்க் நிறுவனம. செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 21-12-2020 அன்று குரு, சனி ஆகிய கிரகங்களும் 6 பாகையில் உத்தராடம் 3 ஆம் பாதத்தில் சஞ்சரிக்கும். எனவே இக்கிரகங்கள் இரண்டும. மகர ராசியில் உள்ளன என்பது அறியக் கூடியதாக இருப்பதும், இதன் பிரகாரம் இலங்கைத் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி இந்நிகழ்வு சரிவர அமைந்திருப்பதை நேரடியாக அவதானிக்க முடியும். எனினும், மற்றொரு பஞ்சாங்கமாகிய வாக்கிய பஞ்சாங்கத்தின்படி குருமகரராசியில் உத்தராடம் 4 ஆம் பாதத்திலும், சனிபகவான் தனுராசியில் உத்தராடம் முதலாம் பாதத்திலும் உள்ளன. இப்பஞ்சாங்கத்தின்படி இரு கிரகங்களின் சேர்க்கை நிகழ வாய்ப்பே இல்லை. எனவே மக்கள் யாவரும் இக்கிரக சேர்க்கையினை நேரடியாக அவதானித்து எப்பஞ்சாங்கம் சரியான நிகழ்வைக் காட்டுகின்றது என்பதை முடிவெடுக்கக் கூடியதாக இருக்கும். பஞ்சாங்கக் கணிப்பு சரிவர அமைந்திருந்தால் கிரக சேர்க்கைமூலம் அதனை நிரூபிக்க முடியும்.

**- திருமதி சந்திரவதனி அருணாசலம்.-**

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் கொரோனா பரவ மக்களே காரணம்; இங்கு இன்னும் கொத்தணி உருவாகவில்லை

## இப்படிக் கூறுகின்றார் ஆளுநர் சார்ள்ஸ்



யாழ்ப்பாணம்,டிசெ.16

வடக்கு மாகாணத்தில் அதிகளவில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மக்கள் ஒத்துழையாமையே காரணம்.

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் தொடர்பான தகவல்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் வழங்கத் தவறியமையே கொரோனாத் தொற்றுப் பரவலுக்குக் காரணம்.

மருதனார்மடம் தொற்று நிலைமை தொடர்பில் 500 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்றாளர்களுடன் தொடர்புடைய வர்களைக் கண்டறியும் நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காணும் வரை, தொற்று சமூகப் பரவலாக உருமாறுவதைத் தடுக்கும் நோக்கில், தொற்றாளர்கள் அதிகமாகவுள்ள இடங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

ஏற்கனவே பொதுமக்களுக்கு ஓர் அறி வித்தலை வழங்கியிருந்தேன். வெளியி டங்களிலிருந்து யாராவது உங்கள் பிரதேசங்களுக்கு வந்தால் அது தொடர்பில் சுகாதாரப் பிரிவுக்கு அறிவிக்குமாறு.

ஆனால், இந்த அறிவிப்பு தொடர்பில் பொதுமக்கள் எமக்கு ஒத்துழையாமையே இன்று தொற்றுப் பரவுவதற்கு ஏதுவாகி விட்டது.

வடக்கில் இன்னமும் கொரோனா கொத்தணிகள் உருவாகவில்லை. ஆகவே, மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, தொற்றிலிருந்து தம்மையும், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். - என்றார்.

# சமூகத் தொற்றை இனியாவது அரசு ஒப்புக்கொள்ளவேண்டும்

## ஆளுந்தரப்பு எம்.பி. திஸ்ஸ விதாரண இடித்துரைப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தற்போது கொத்தணிகளுக்குள் மாத்திரமின்றி சமூகம் முழுவதும் பரவி வருகின்றது. இனியாவது இந்த உண்மையை அரச தரப்பினர் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவைரஸ் உலகத்தில் பரவிவரும் புதிய வைரஸ் என்பதால், அதனை எதிர்கொள்ளும் நோய் எதிர்ப்புசக்தி மனிதர்களிடம் இல்லை.

இந்த வைரஸ் இலங்கையில் சமூகம் முழுவதும் பரவி உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள சிலர் விரும்பவில்லை. எனினும், உண்மையை எதிர்கொண்டு, அத னைக் கட்டுப்படுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றியவர்க ளில் 80 வீதமானவர்களுக்கு எந்த நோய் அறிகுறிகளும் தென்படுவதில்லை என் பது உறுதியாகி இருக்கின்றது - என்றார்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை 'பட்ஜட்' மீண்டும் தோற்கடிப்பு

## மேயர் பதவியை இழக்கின்றார் ஆனால்ட்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டிக்கான வரவு - செலவுத் திட்டம், மாநகர மேயர் இம்மானுவேல் ஆனோல்ட்டால் கடந்த 2 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமர்ப்பணத்தின்போது, அதற்கு ஆதரவாக 19 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டு முதலாவது வாசிப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், யாழ். மாநகர மேயர் இம்மானுவேல் ஆனால்ட் தலைமை யில் இன்று காலை இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு இடம்பெற் றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 03 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப் பினர் ஒருவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு ஆதரவாக வாக்க ளித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு எதிராக வாக்களித்தனர். அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்தமையால் மேயர் பதவியை இழக்க வேண்டிய நிலைமை ஆனோல்ட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

# செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளராக கூட்டமைப்பின் ஜெகதீஸ்வரன் தெரிவு

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவால்



வவுனியா, டிசெ. 16

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுப்பையா ஜெகதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆளுகைக்குள் இருந்த செட்டிகுளம் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் இரண்டு தடவைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோல்வி அடைந்திருந்தது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து வரவு - செலவுத்திட்டத்தை தோற்கடித்திருந்தன.

இந்தநிலையில், புதிய தவிசாளருக் கான வாக் கெடுப்பு வடக்கு மாகாண உள் ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சு. ஜெகதீஸ்வரனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஏற்கனவே தவிசாளராகப் பதவி வகித்த ஆ. அந்தோணியின் பெயரும் முன்மொழியப் பட்டது.

தெரிவுக்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சு.ஜெகதீஸ்வரன் 10 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அவருக்கு ஆதரவாகக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் என 10 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான ஆ.அந்தோணி 6 வாக்குகளை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தார். அவருக்கு ஆதரவாக அந்தக் கட்சியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்திருந்தார்.

இந்தநிலையில், மூன்று வருடங்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவால் செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சு.ஜெகதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார். (100)

# ஜனாஸா எரிப்புக்கு எதிராகப் போராட்டம்



கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை எரிக்காது அடக்கம் செய்யக் கோரி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்தவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து பூநகரி பிரதேச செயலகம் முன்பாகக் கவனயீர்ப்புப் பதாதை காட்சிப்படுத்தப்பட்டது.

உலக நாடுகளில் அனுமதிக்கப்பட்டுள் ளது போன்று இஸ்லாமிய மத முறைமைக்கு எதிராக ஜனாஸாக்களை எரிக்க வேண்டாம் எனவும், மத அனுஷ்டானங் ளுக்கு ஏற்ற வகையில் அதனை அடக்கம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடு கொரோனாவில் சிக்கியமைக்கு அரசின் இயலாமையே காரணமாகும்!

## ராஜித சேனாரட்ன காட்டம்

அரசாங்கத்தின் இயலாமையாலேயே இன்று ஒட்டு மொத்த நாடே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். ராஜித சேனாரட்ன மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இன்று நாடளாவிய ரீதியாக கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிவருகிறது. அமெரிக்காவிலுள்ள சுகாதார ஆய்வுமையமொன்று, இலங்கையை அதிக ஆபத்துள்ள நாடுகளின் பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளது.

இந்த அரசாங்கத்தின் இயலாமையாலேயே இன்று இந்த நிலைமையில் நாம் இருக்கிறோம். இதுதொடர்பாக நாம் நாடாளுமன்றிலும் உரையாற்றியுள்ளோம்.



அரசாங்கத்தின் பிழைகளை சுட்டிக்காட்டியுள்ளோம். எனினும், அரசாங்கம் இதனைக் கேட்காமல், புதிது புதிதாக மருந்துகளைக் கண்டுப்பிடித்துக் கொண்டிருக்கிறது.

அண்மையில், மருத்துவர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட பானம் ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கினார்கள்.

சுகாதார அமைச்சாலேயே, இந்த தனியார் நபரின் தயாரிப்பிலான பானம் வழங்கப்பட்டது. பின்னர், இது கொரோனாவுக்கானது அல்ல என்று கூறப்பட்டது. இவர்களின் செயற்பாடுகள் அச்சத்தைத் தான் ஏற்படுத்துகின்றன.

உலகமே பல்வேறு ஆய்வுகளுக்கு மத்தியில் கொரோனா ஒழிப்பு மருந்தை கண்டு பிடித்துக் கொண்டிருக்கும்போது, அரசாங்கத்தரப்பினரோ புதிது புதிதாக பானங்களைப் பருகிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு புதிது புதிதாகப் பானங்கள் இன்னமும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. கடந்த ஆட்சிக்காலத்தில் இவ்வாறான காரியங்கள் இடம்பெற்றுள்ளனவா?

தேசிய ஔடத சங்கம், இவ்வாறான பானங்களைப் பருக வேண்டாம் என மக்களுக்குத் தெரிவித்துள்ளது. ஆயுர்வேத வைத்தியர் சங்கமும் இந்தப் பானங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

அரசாங்கம் இந்த ஊடக நாடகத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சடலங்கள் மாலைதீவில் அடக்கம் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று!

### நளின் பண்டார தெரிவிப்பு



கொரோனா தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை மாலை தீவுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை என்பது நடைமுறை சாத்தியமற்றது என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த (செவ்வாய்க் கிழமை) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு கூறினார்.

நாட்டிற்குள்ளேயே அடக்கம் செய்ய அனுமதிப் பதன் மூலம் பொதுமக்கள் அல்லது அரசாங்கத்தால் ஏற்படும் செலவைக் குறைக்க முடியும்.

விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்வதன் மூலம், கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய பொருத்தமான இடத்தை அடையாளம் காண வேண்டும்.

இந்த நடைமுறை உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது என்றும் எனவே அனைத்து தரப்பினருடைய உரிமைகளும் பாதுகாக்கப் படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## அரசின் கட்டமைப்புசார் இனவழிப்புக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு!

### தர்மலிங்கம் சுரேஷ் குற்றச்சாட்டு

அரசாங்கத்தின் கட்டமைப்பு சார் இன அழிப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மறைமுகமாக ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு அமைப்பாளர், தர்மலிங்கம் சுரேஷ் குற்றஞ்சாட்டினார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மட்டக்களப்பு மயிலந்தனை மேச்சல்தரை விவகாரம் தொடர்பாக பிரபல சட்டத்தரணி இரத்தினவேலால் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சாணக்கியன் ஆகியோர் மக்களை ஏமாற்றுவதற்காக வழக்கு தொடரப் போகின்றனர் என அறிவித்து மீண்டும் ஒரு கபட நாடகத்தை நடத்தியுள்ளனர்.

மயிலத்தனைமடு மேச்சல்தரை பிரச்சினை பாரிய பிரச்சினை. இந்தப் பகுதியில் அவர்கள் கால்நடைகளை நீண்டகாலமாக மேய்க்கமுடியாமல் சிங்கள மக்களால் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றனர். கடந்த நல்லாட்சிக் காலத்தில் இது தொடர்பான பிரச்சினைகள் அதிகப்படியாக



இடம்பெற்றன.

அப்போது பண்ணையாளர்களால் அது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முறையிட்டும்கூட அவர்கள் இழுபறிப்போக்கைக் கடைப்பிடித்து வந்தமையுடன், அந்த மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவோ பிரச்சினை தொடர்பாகவோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை

ஆனால் இன்றைக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பிர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன். மா.சாணக்கியன், கோ.கருணாகரன் ஆகியோர் மயிலத்தனைமடு பண்ணையாளர்களைச் சந்தித்து ஒருநாடகத்தை நடத்தி வழக்கு தொடரப்போவதாக அறிவித்துள்ளனர். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாகாணசபை முறை நாட்டுக்கு அவசியம்!

### ரோஹித அபேகுணவர்தன வலியுறுத்தல்

மாகாண சபை முறைமை நாட்டுக்கு மிகவும் அவசியமான ஒன்று என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் கடந்த (செவ்வாய்க் கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை கடந்த அரசாங்கத்தில் அரசியல் நோக்கங்களுக்காகப் பலவீ



னப்படுத்தப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்று மாகாண சபை முறைமையைப் பலப்படுத்தும் என்றும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

## ‘நீர்ப்பாசன சுபீட்சம்’ வேலைத்திட்டம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது!

கொழும்பு, நவ.17

5000 கிராமிய சிறு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் தொகுதிகளை மீள் நிலைக்குக் கொண்டு வருவதற்காக ‘நீர்ப்பாசன சுபீட்சம்’ எனும் தொனிப்பொருளின் கீழ் இரண்டு வருட துரித வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாடுதழுவிய ரீதியில் அமைந்துள்ள 50 ஆயிரம் பேர் வரையிலான சிறு குளங்கள், அணைக்கட்டு, நீர்ப்பாசனக் கால்வாய்த்தொகுதி, குளத்தொகுதிக் கட்டமைப்பு போன்றவற்றின் பராமரிப்புக்காக நிரந்தர நிதியின்மையால் அவற்றைப் பராமரித்தலில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அதனால் ஒவ்வொரு வருடமும் பருவ மழைக்காலம் முடிவடையும் போது 1000 கிரா மிய நீர்ப்பாசனத் தொகுதிகள் வரை சேதமடைந்து போகின்றமையால், நாடளாவிய ரீதியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக் கூடிய ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்கள் தற்போது தரிசு வயல்களாக மாறியுள்ளமை அவதானிக்க முடிகிறது.

இந்நிலைமைக்குத் தீர்வுகாணும் வகையிலும், தேசிய உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் வழிகாட்டலின் கீழ் 5 ஆயிரம் கிராமிய சிறு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் தொகுதிகளை மீள் நிலைக்குக் கொண்டு வருவதற்காக ‘நீர்ப்பாசன சுபீட்சம்’ எனும் பெயரில் இரண்டு வருட துரித வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை ஒப்பந்த அடிப்படையில் இல்லாமல், அரசாங்கத் திடமுள்ள மனித வளம் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தி, கிராமிய மட்டத்திலுள்ள சமயத் தலைவர்களின் தலைமையில், விவசாயிகள், பாடசாலைகள், இளைஞர்கள் மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இயன்ற வரை கிராமிய விவசாயிகளிடம் நாளாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் தேவையான உழைப்பைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

அதற்கமைய, 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி 1000 குளங்களை இந்த வேலைத்திட்டத்துக்கு அமைய ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கொரோனா பாதித்த சுற்றுலாத் துறையினருக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படும் – பிரசன்ன

கொவிட் – 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறை சார்ந்தவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்ட அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்–

சுற்றுலாத்துறை சார்ந்தவர்களுக்காக ஏற்கனவே பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையை முன்னெடுத்துச் செல்வதற்காக வங்கிகள் மூலம் இது வரை 15 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தை திறந்தாலும் இந்தத் துறையை வழமைக்குக் கொண்டு வர எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

சுற்றுலாத்துறை வழமை நிலைக்குத் திரும்பும் வரை இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 36 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது!



5 படகுகளும் மீட்பு

இலங்கை கடற்படையினரும் கரையோர பாதுகாப்பு படையினரும் இணைந்து இலங்கையின் பல்வேறு கடல் பரப்புக்களில் நடத்திய விடே நடவடிக்கைகளில், சட்ட விரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் உட்பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர் எனக் கூறப்படும் 36 இந்திய மீனவர்கள் 5 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் வெளிநாட்டு மீனவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கடந்த மார்ச் மாதம் முதல் கொவிட் நிலைமை காரணமாகத் தடைப்பட்டிருந்த நிலையிலேயே, நேற்று இந்த விடே சுற்றிவலைப்பு இடம்பெற்றுள்ளது. உள்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு இந்த விடே சுற்றிவலைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

அதன்படி, வடக்கு கடற்படை கட்டளைத் மையம் ஊடாக நெடுந்தீவு அருகே முன்னெடுக்கப்பட்ட விடே நடவடிக்கையில், உள்நாட்டு கடற்பரப்புக்குள் அத்து மீறிய 3 மீனவப்படகுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. அதில் 22 இந்திய மீனவர்கள் இருந்துள்ள நிலையில் அவர்கள் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், வட மத்திய மாகாண கடற்படை கட்டளை மையம் ஊடாக மன்னார் வடக்கு கற்பரப்பிலும், வட மேல் கடற்படை கட்டளை மையம் ஊடாக வடமேல்கடற்பரப்பிலும், விஷேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது, இரு படகுகளுடன் 14 இந்திய மீனவர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இந்தியமீனவர்களும் கடற்படை முகாம்களில் 14 நாள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதன்படி, அந்த தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் உரிய சட்ட நடவடிக்கைகளுக்காக அவர்கள் உரியதரப்பினரிடம் கையளிக்கப்படுவர் என கடற்படை பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா கூறினார்.

# மரண அறிவித்தல்

## அமரர்.
## திருமதி. பொன்மலர் சோதிநாதன்

வண்ணார்பண்ணை, கில்னர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட அமரர். பொன்மலர் சோதிநாதன் 16.12.2020 புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, வள்ளிநாயகி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை, பாறுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும்,

சோதிநாதனின் பாசமிகு மனைவியும், சக்திதரன், அஜந்தா, அபிராமி (இலண்டன்), அனிதா (இலங்கை வங்கி - ஸ்ரான்லி வீதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மதீனா, தவகாந்தன் (1990 அம்புலன்ஸ் சேவை), இராகவன் (இலண்டன்), மயூரன் (மின்சார சபை - சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

காஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் நகுலேஸ்வரன் (இந்தியா), நாகேஸ்வரி, வரதாம்பிகை, சிவகுமார் (ஜேர்மனி ), சுகுமார், ஜெயலலிதா, ராஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரியும்,

சாய் இனியன், ஒளிநிலவன், மலரவன், சாத்விகா, பிருத்விகா ஆகியோரின் பேரன்புக்குரிய பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.12.2020 வியாழக்கிழமை, முற்பகல் 9.00 மணியளவில், முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

37 7, முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு
தொ.பே.இல: 076 622 0832

தகவல்
குடும்பத்தினர்.

# துப்பாக்கிச் சூட்டிலேயே நான்கு கைதிகள் சாவு!

## பிரேத பரிசோதனையில் உறுதி

மஹர சிறைச்சாலை கலவரத்தின்போது உயிரிழந்த 11 கைதிகளில் நால்வர் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர் என பிரேத பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்த தகவலை நேற்று புதன்கிழமை காலை வத்தளை நீதிவான் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

# திருநெல்வேலி பொதுச் சந்தையில் 313 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – திருநெல்வேலி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ளும் வியாபாரிகள் 313 பேரின் மாதிரிகள் பி.சி. ஆர். பரிசோதனைக்காக இன்று பெறப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் எழுமாறாக தெரிவு செய்யப்படுவோரிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதில் ஓர் அங்கமாகவே இன்று நல் லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள திருநெல்வேலி பொதுச்சந்தை வியாபாரிகளின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. இதன் முடிவுகள் இன்றிரவு அல்லது நாளை வெளியாகும் என அறிவிக்கப்பட் டுள்ளது.


Anna EXPRESS Courier Services



அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

077 8889388
075 3305500
070 3305500

லண்டன் 1000/=
பிரான்ஸ் ஜேர்மனி டென்மார்க் கொலண்ட் 1150/=
அமெரிக்கா கனடா 1450/= (11 kg க்கு மேல்)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1992.10.28
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - அனுசம்
செவ் - 8இல்
பாவம் - 29 3/4
கல்வி - Software Engineer
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - Engineer Or Doctor

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1996.08.22
மதம் - குருகுலம் K+K
நட்சத்திரம் - சுவாதி
பாவம் - 26
சூ/ செவ் - ------
கல்வி - HNDA
தொழில் - --------
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

பசுமை PASUMAI

பசுமை உயிரியல் கூட்டுப்பசளை

பச்சை இலைகள், தாவர கழிவுகள், கரி ஆகிய மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டது.
விலங்குக் கழிவுகள் அற்றது.
சாதாரண கூட்டுப்பசளைகளை விட மிக மிக அதிகமான நுண்ணுயிரிகளையும் தாவர போசனை மூலகங்களையும் தன்னகத்தே கொண்டது.



போசனை உள்ளடக்கம்:

| | | |
|---|---|---|
| சேதன காபன் | 25.7 | 25% |
| நைதரசன் (தழைச்சத்து) N | 2.0 | 3.5% |
| பொஸ்பரஸ் (மணிச்சத்து) P | 0.5 | 1.0% |
| பொட்டாசியம் (சாம்பல்சத்து) K | 0.2 | 0.6% |

Ca, Mg, Mn, Zn, Fe, Cu ஏன்பவற்றுடன் ஏனைய தாவர நுண் போசனை மற்றும் போசனை மூலகங்கள்

உற்பத்தி ஆதரவு
சார பூமி லங்கா – உயிரி உற்பத்தி நிறுவனம்
ஆராய்ச்சி ஆய்வுகூடம், கண்டி.

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

021 492 7778 pasumailanka@gmail.com www.pasumai.lk facebook.com/pasumaiagri


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2020 இல் வெளியிடப்பெற்றது.